1974 மார்ச் 27]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தச் சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த வட்டாரங்களை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்ல என்ன தகுதிகளை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது? தக்கலை ஊராட்சி ஒன்றியத்தை மட்டும் எடுப்பதற்கு விசேஷ காரணங்கள் உண்டா? தக்கலையில் ஆளும் கட்சி உறுப்பினர் தலைவராக இருக்கும் காரணத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டதா அல்லது வேறு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இதுவரை தக்கலை மாத்திரமல்லாமல் 38 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு கிராமமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் தக்கலை கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கட்சிக் கண்ணோட்டத்தோடும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஐந்தாண்டு காலத்திற்கு இத் திட்டத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதை எல்லாம் விவரமாகக் குறிப்பிட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு அங்காங்கே ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக என்ன காரியங்கள் செய்யப்படுகின்றன என்ற விவர அறிக்கை வேண்டுமென்று கேட்டால் அதை வைக்கத் தயாராக இருக்கிறேன்.

Housing Projects

* 638 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sought the assistance of the Hindustan Housing Factory for the Housing Projects of the State Housing Board; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ் : வீடு கட்டும் பொருள்களின் விலை அதிகரித்து வருவதால் இவ்வித ஸ்தாபனத்தின் உதவி இருந்தால் அனுகூலமாக இருக்கும் அல்லவா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்துஸ்தான் உறவுசிங் பாக்டரியிலிருந்து ப்ரிஃபாப்ரிகேடட் ஹவுஸ் கட்ட கட்டுமானப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலையை அம்பத்தூரில் ஏற்படுத்தலாம் என்று இந்திய அரசு பரிந்துரை செய்திருக்கிறது. தமிழக அரசு அதுபற்றிப் பரிசீலித்து வருகிறது. அதன்மூலம் வீடு கட்டும் செலவு ஓரளவு குறையும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நகர்ப்புறங்களில் வீட்டு மனைகளின் விலைகள் ஏறிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக வீடு கட்டும் திட்டம் கூட்டுறவு முயற்சியில் பாதிக்கப்படுகிறது. அந்த விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீடு கட்டும் பொருள்களில் சிமென்ட், இரும்பு போன்றவை அதிக விலையாக இருக்கின்றன. நிலத்தின் விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. நிலத்தின் விலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. ப்ரிஃபாப்ரிகேடெட் ஹவுஸைப் பொறுத்தவரை தமிழகத்திலுள்ளவர்கள் அதிகமாக விரும்பாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்துஸ்தான் ஹவுசிங் பாக்டரிமூலம் ப்ரிஃபாப்ரிகேடட் ஹவுசுக்கான தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசாங்கம் பரிந்துரைத்தும்கூட மாநில அரசாங்கம் காலதாமதம் செய்யக் காரணம் என்ன ? சாதாரணமாக எதற்கெடுத்தாலும் மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டிக் கொண்டிருப்பவர்கள் இதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தும் நீங்கள் காலதாமதம் செய்யக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மூன்று கோடி ரூபாயில் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை வருவதற்கு பேச்சுவார்த்தைகள் நடந்து

1974 மார்ச் 27]

கொண்டிருக்கின்றன. காலதாமதம் எங்களால் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொன்னவுடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தொழிற்சாலை வருவதற்குள் நம்முடைய மக்களைத் தயாராக்கும் சூழ்நிலை இருக்கிறது. இன்று ப்ரிஃப்பாப்ரிகேடெட் மாதிரி வீடுகளைக் கட்டியிருக்கிறோம். அதற்கு டிமாண்ட் அதிகமான அளவு வரவில்லை. அது வந்தவுடன் இந்தத் தொழிற்சாலை அமைவது நல்லது என்று அரசு கருதுகிறது.

தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்

* 639 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) இல்லை. இருப்பினும் இம் மாநிலத்தில் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி மானியத் திட்டம் Subsidised Industr ial Housing Scheme.) செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளுக்குச் சென்றுவர வசதியாக மையமாக அமைந்துள்ள பகுதியில் பொதுவாக குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்தத் திட்டம் ஏற்கனவே ஏழு ஆண்டுகளுக்கு முன்பே அமலுக்குக் கொண்டுவரப்பட்ட திட்டம். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு இதை விரிவாக்கும் என்று கருதினோம். இன்னும் அது விரிவாக்கப்படாமல் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். ஏற்கனவே திரு. வி. க. நகரில் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. ஒன்று கட்டிமுடித்த வீடுகள் பழுதுபார்க்கப்பட வேண்டும், இல்லையென்றால் இன்னும் ஏராளமான வீடுகளைத் தொழிலாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கவேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறது?